# காங்கயம் நகராட்சி

# சாதாரண கூட்டம்

**காங்கயம் நகராட்சியின் சாதாரண கூட்டம் நிகழும் சுபகிருது வருடம் தமிழ் மாதம் கார்த்திகை 08 ஆம் நாள் ஆங்கில வருடம் 2023 நவம்பர் 24 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு காங்கயம் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். அது சமயம் கீழ்க்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்ய இருப்பதால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

**இடம்:காங்கயம்** **நகர்மன்ற தலைவர்**

**நாள்:17.11.2023** **காங்கயம் நகராட்சி**

**பொருள் எண் : 1**

**கோப்பு எண் 2072/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட் தெற்கு பார்த்த கடை எண்.19 A-க்கு 31.07.2023 உடன் குத்தகை காலம் 9 ஆண்டுகள் முடிவடைகிறது. எனவே ஏல விதிமுறைகளின்படி மேற்கொண்டு ஒப்படைக்கும் தேதி முதல் 9 ஆண்டு காலத்திற்கு பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி கடைக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 641 நாள் : 24.11.2023 |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 2**

**கோப்பு எண் 1933/2015/அ1**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான திருப்பூர் ரோடு ஐ.டி.எஸ்.எம்.டி கடை எண்.4 ஐ திரு.ராஜாமணி என்பவர் 01.04.2016 முதல் வாடகைக்கு எடுத்து நடத்தி வந்தார். தற்போது

வாடகை தொகையினை செலுத்த இயலாத காரணத்தினால் 12.10.2023 அன்று கடையினை பூட்டி நகராட்சி வசம் ஒப்படைத்துவிட்டார்.

எனவே இக்கடைக்கு 01.11.2023 முதல் 31.03.2024 வரை உள்ள கேட்பினை கணினியில் நீக்கம் செய்யவும், மேற்படி கடையினை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| <u>நகர்மன்ற தீர்மான எண்.</u> | : | 642 நாள் : 24.11.2023 |
| <u>தீர்மானம்</u> | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 3**

**(கோப்பு எண்.1097/ 2023/ எப்1)**

திருப்பூர் மாவட்டம் காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.ச.எண். 823/1- ல் 6500 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி திரு.பால்சாமி த/பெ.பெரியசாமி என்பவர் இணையதளம் வாயிலாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார்.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேசத்தை பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடித ந.க எண் CSKHT016/2022/TCP,13.04.2023–ல் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/TIRUPPUR/LAYOUT No.107/2023 நாள்.13.04.2023 மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

காங்கயம் நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலைகள், பொது உபயோகத்திற்கான இடம் மற்றும் மின்பகிர்மானத்திற்கு (TANGEDCO) ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் ஆகியவை காங்கயம் சார் பதிவாளர் அலுவலக ஆவணம் எண் 2240/2023 நாள்.25.03.2023 ன் மூலம் ஆணையாளர், காங்கயம் நகராட்சி அவர்களுக்கு தானப்பத்திரம் வாயிலாக மனைப்பிரிவுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

அரசாணை எண் **181**, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நவ**4(3)**த்துறை நாள்.**09.12.2021–**ல் தெரிவித்துள்ளபடி, மனைப்பிரிவிற்கு தேவையான தார்சாலை வசதி மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி பூங்கா மற்றும் திறவிடங்களுக்கு வேலி அமைத்தல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மனைப்பிரிவு உரிமைதாரருக்கு கேட்பு அனுப்பி மனைப்பிரிவுதாரரிடமிருந்து வசூல் செய்ய காங்கயம் நகராட்சி பொறியாளருக்கு குறிப்பு வைக்கப்பட்டதை தொடர்ந்து காங்கயம் நகராட்சி பொறியாளர் தனது 13.10.2023 –ம் தேதிய குறிப்பில் தயார் செய்த மதிப்பீட்டின் படி

| | | | |
|---|---|---|---|
| 1 | குடிநீர் குழாய் அமைத்தல் | - | 150000 |

| | | | |
|---|---|---|---|
| 2 | தெருவிளக்குகள் அமைத்தல் | - | 290000 |
| 3 | வைப்பு தொகை | | 200000 |
| | மொத்தம் | | 640000 |

நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட குடிநீர் குழாய் அமைத்தலுக்கான தொகை ரூ.1,50,000/—யை பற்றுச்சீட்டு எண்.158/158/01/23-24/0010788, நாள்.13.09.2023 மற்றும் தெருவிளக்கு அமைப்பதற்கான தொகை ரூ.2,90,000 பற்றுச்சீட்டு எண்.158/158/01/23-24/0010789 நாள்.13.09.2023—ல் மற்றும் வைப்பு தொகை ரூ.2,00,000 பற்றுச்சீட்டு எண்.158/158/01/23-24/0014773 நாள்.13.10.2023—ல் நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார். மேலும் கோவை தொழில்நுட்ப கல்லூரி மூலம் மூன்றாம் நபர் தரபரிசோதனை சான்று எண். CIT/CIVIL/HEL/JCS/EJM/2023/CITL-729/CE-1124/16 நாள்.30.08.2023—ல் நல்ல முறையில் மனுதாரரால் அமைக்கப்பட்டுள்ளது என சான்று வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் மனைப்பிரிவு அனுமதிக்காக செலுத்த வேண்டிய தொகைக்கான கேட்பு இவ்வலுவலக அறிவிப்பு ந.க எண் 1097/2023/எப்1, நாள்:26.10.2023—ன் வாயிலாக மனைப்பிரிவுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, **1.** கூர்ந்தாய்வுக் கட்டணம் – ரூ.**10000**/—, 2.மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் —ரூ.20000/-, 3.அபிவிருத்திக் கட்டணம் 40000/-,பற்றுச்சீட்டு எண் 158/158/01/23-24/0015622, நாள்.26.10.2023—ன் வாயிலாக நகராட்சி கருவூலத்தில் மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. அரசாணை எண்.79, வீட்டு வசதி வாரியம் மற்றும் நகர்ப்புறவளர்ச்சி (நவ 4(3)) துறை, நாள். 04.05.2017—ன் படி நிலப்பயன்மாற்ற பரிசீலனைக் கட்டணம் ரூ.1000/- மற்றும் நிலப்பயன்மாற்ற கட்டணமாக ரூ.33810— காங்கயம் இணையதள செலுத்துச் சீட்டு எண். 20231102020682, 20231026005288 நாள்.26.10.2023 மற்றும் 20231102020682 நாள். 02.11.2023 வாயிலாக மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.ச.எண். 823/1-ல் 6500 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீட்டினை நகர்மன்றத்தின் பராமரிப்பிற்கு ஏற்பதற்கும் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கவும் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | **643** நாள் : **24.11.2023** |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 4**

**கோப்பு எண்.1208/2023/எச்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கில் மக்கும் குப்பைகளை அரைத்து உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ள பயன்படுத்தி வந்த குப்பைகள் அரைக்கும் இயந்திரம் பழுதடைந்து இயங்காமல் உள்ளதால் மேற்படி பணிகள் தொடர்ந்து நடைபெறாமல் உள்ளது. எனவே மேற்படி இயந்திரத்தினை சரி செய்வதற்கு குறித்த பணிக்காக விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **தொகை ரூ** |
|---|---|---|
| 1 | எஸ். சுப்பையா, வெள்ளகோவில் | 70918 |
| 2 | ஆர். வடிவேல், வெள்ளகோவில் | 70446 |
| 3 | காந்தி மோட்டார்ஸ், ஈரோடு | 65608 |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய காந்தி மோட்டார்ஸ், ஈரோடு அவர்களது விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 644 நாள் : **24.11.2023** |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 5**

**கோப்பு எண். 1260/2023/எச்1**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி தூய்மை பணியாளர்கள் மற்றும் கணக்கீட்டாளர்களின் பயிற்சியின் 29.09.2023 அன்று கோபிசெட்டிபாளையம், புஞ்சை புளியம்பட்டி, பவானி, சத்தியமங்கலம் மற்றும் காங்கயம் ஆகிய நகராட்சிகளின் கணக்கீட்டாளர்கள் காங்கயத்தில் Sanitary Workers Development Scheme –ல் துப்பரவு அலுவலர் மற்றும் துப்பரவு ஆய்வாளர் தலைமையில் பயிற்சி நடைபெற்றது. அதன்படி

விளம்பரபலகை மற்றும் பயிற்சிக் கூடம், தேநீர் மற்றும் உணவுகள் தயார் செய்யப்பட்டதில் தொகை ரூ. 30000/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டைமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 645 நாள் : 24.11.2023 |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 6**

**கோப்பு எண். 349/2023/எச்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளில் தினசரி சேகரமாகும் மக்கும் கழிவுகள் மூலம் தயார் செய்யப்படும் கலவை உரத்தினை செழிப்பு என்னும் பெயரில் பிரிண்ட் செய்த பைகள் வாங்கி உரத்தினை சேகரம் செய்து விற்பனை செய்திட அரசு தெரிவித்துள்ளதற்கிணங்க பைகள் தயார் செய்து பிரிண்டிங் அடித்து பயன்படுத்தும் பணிக்கு ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.563, நாள். 31.08.2023 ன் படி மன்றம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 16.10.2023 ல் நடைபெற்ற உள்ளூர் விலைப்புள்ளிகளில் கீழ்க்காணும் படி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ |
|---|---|---|
| 1 | சாமிகா காட்டன் பேக்ஸ் | 27375 |
| 2 | வாசன் டிஜிட்டல் , திருச்சி | 26625 |
| 3 | வேல்முருகன் பேக்ஸ், தஞ்சாவூர் | 25050 |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய வேல்முருகன் பேக்ஸ், தஞ்சாவூர் அவர்களது விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று செலவினம்

மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 646 நாள் : 24.11.2023 |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 7**

**கோப்பு எண். 808/2023/எச்1**

காங்கயம் நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனங்கள் பழுதுகள் சரிசெய்வதற்கு மற்றும் சில்லறை செலவினங்கள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண். 566, நாள். 31.08.2023 –இன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி குறித்த பணிக்காக விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ, |
|---|---|---|
| 1 | ஸ்ரீ டயர்ஸ் | 119500 |
| 2 | ஸ்ரீ பாலாஜி டயர்ஸ் | 120500 |
| 3 | ஆர். முத்துச்சாமி | 118000 |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஆர். முத்துச்சாமி அவர்களது விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டைமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

| நகர்மன்ற தீர்மான எண். | : | 647 நாள் : 24.11.2023 |
|---|---|---|
| தீர்மானம் | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 8**

பொது சுகாதார பிரிவின் மூலம் வார்டு எண் 1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள ஏற்கனவே நகர்மன்ற தீர்மானம் எண்.561, நாள்.31.08.2023–இன் படி அனுமதி பெற்று பணி நடைபெற்று வருகிறது. தற்போது இப்பணி 31.10.2023–ன் படி முடிவடைந்த நிலையில் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 01.11.2023 முதல் 31.12.2023 வரை பணி நீட்டிப்பு செய்திட உத்தேசமாக ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) செய்து Southern Solid Waste Management Service கன்னியாகுமாரி எனும் நிறுவனத்தினர் பணியை மேற்கொள்ளவும் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இதர செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.552/2022/எச்1)**

| நகர்மன்ற தீர்மான எண். | : | 648 நாள் : 24.11.2023 |
|---|---|---|
| தீர்மானம் | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 9**

**கோப்பு எண்.1154/2023/எச்1**

காங்கயம் நகராட்சிக்கு உட்பட்ட அரசு மற்றும் நகராட்சி பராமரிப்பிலுள்ள பள்ளியில் கழிப்பறைகளை சுத்தம் செய்யும் பணி, வகுப்பறைகள் சுத்தம் செய்யும் பணி மற்றும் பள்ளி வளாகத்தை சுத்தமாக பராமரிப்பு செய்திட தனியார் ஒப்பந்தம் மூலம் பணியாளர்களை நியமிக்க அசாணை (நிலை) எண்.166, நாள்.23.11.2016 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, காங்கயம் நகராட்சியில் பின்வரும் விபரப்படி பள்ளிகளுக்கு தேவைப்படும் தூய்மை பணியாளர்களின் விபரம்

| வ. எ ண் | பள்ளியின் விபரம் | தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை (நபர்கள்) | | |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | அரசு உயர்நிலைப்பள்ளி, தாராபுரம் ரோடு, காங்கயம் | 2 | 2 | 4 |
| 2 | நகராட்சி துவக்கப்பள்ளி அகிலாண்டபுரம், காங்கயம் | 1 | 0 | 1 |
| 3 | நகராட்சி துவக்கப்பள்ளி அகஸ்திலிங்கம் பாளையம் காங்கயம் | 1 | 0 | 1 |
| 4 | நகராட்சி துவக்கப்பள்ளி தொட்டியபட்டி காங்கயம் | 1 | 0 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | நகராட்சி நடுநிலைப்பள்ளி, பாரதியார் நகர், காங்கயம் | 1 | 1 | 2 |
| 6 | நகராட்சி நடுநிலைப்பள்ளி, பழையகோட்டை ரோடு, ராஜாஜி வீதி, காங்கயம் | 1 | 1 | 2 |
| 7 | தொடக்கப்பள்ளி, களிமேடு, காங்கயம் | 1 | 0 | 1 |
| | மொத்தம் | 8 | 4 | 12 |

மேற்கண்ட 7 பள்ளிகளில் கழிவறைகள் சுத்தம் செய்தல், வகுப்பறைகள் சுத்தம் செய்தல் மற்றும் பள்ளி வளாகத்தை தூய்மையாக வைத்திருத்தல் போன்ற துப்புரவு பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலியுடன் பணியாளர்களுக்குரிய EPF, ESI, Insurance மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்ட அரசால் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து சலுகைகளும் வழங்கி 12 நபர்களுக்கு குறையாமல் தூய்மை பணியாளர்களை பயன்படுத்தி பணி செய்திட **2023–2024** ஆம் ஆண்டுக்கான **(105** நாட்களுக்கு**)** உத்தேச செலவினம் ரூ.**9.96** இலட்சத்திற்கும், இப்பணியினை தனியாரிடம் ஒப்பந்தம் மூலம் வழங்கி பணி செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 649 நாள் : 24.11.2023 |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 10**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட ரீ.ச. எண் 729/6A –ல் 1.00 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனை பிரிவிற்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ள கடந்த 2021 ம் ஆண்டு ஸ்ரீ வராகி ரியால்டி குருப் அவர்களால் தொகை ரூ.14.10 இலட்சம் நகராட்சியில் செலுத்தப்பட்டது.தற்போது மேற்படி அடிப்படை வசதிகள் மேற்கண்ட ஸ்ரீ வராகி ரியால்டி குருப் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு அதற்கான மூன்றாம் நபர் தரப்பரிசோதனை Coimbatore Institute of Technology, Coimbatore கல்லு ரிடம் இருந்து சான்று இந்நகராட்சியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆதலால் மேற்படி தொகை ரூ. 14.10 இலட்சத்தினை ஸ்ரீ வராகி ரியால்டி குருப் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :மன்றம் அனுமதிக்கலாம்

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 650 நாள் : 24.11.2023 |

| | | |
|---|---|---|
| **<u>தீர்மானம்</u>** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 11**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அய்யாசாமி நகர் காலனி நீருந்து நிலையம் மற்றும் தண்ணீர் பந்தல் நீருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு சுகாராதாரமான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய குடிநீரில் Hypochloride Liquid திரவியம் கலந்து குடிநீர் விநியோகம் செய்யும் பணி மிகவும் அவசியமாகிறது. எனவே, மேற்படி பணி குடிநீர் பணியாக இருப்பதால், பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்**:1201/2023/இ1**)**

| | | |
|---|---|---|
| **<u>நகர்மன்ற தீர்மான எண்.</u>** | : | **651** நாள் : **24.11.2023** |
| **<u>தீர்மானம்</u>** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 12**

காங்கயம் நகராட்சி வார்டு எண்:1 நாச்சிமுத்து மஹால் அருகில் பகுதியில் உள்ள பொதுமக்களின் குடிநீர் தேவைக்காக ஏற்கனவே இருந்த ஆழ்துளைகிணற்றில், மின்மோட்டார் மற்றும் குடிநீர் குழாய்கள் பொருத்தி பராமரிப்பு செய்யும் பணிக்கு ரூ.2.80 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்தி எண்பாதயிரம் மட்டும்) மதிப்பீடு தயார்

செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்**: 1313/2023/இ1)

| | | |
|---|---|---|
| **<u>நகர்மன்ற தீர்மான எண்.</u>** | : | 652 நாள் : 24.11.2023 |
| **<u>தீர்மானம்</u>** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 13**

காங்கயம் நகராட்சி வார்டு எண்:15 கோவை சாலையில் சிறுபாலம் இல்லாததால் கழிவுநீர் செல்வதற்கு சிரமமாக உள்ளது. எனவே இவ்விடத்தில் சிறுபாலம் அமைப்பது அவசியமாகிறது. சிறுபாலம் இல்லாததால் சாலையின் இருபுறமும் கழிவுநீர் செல்ல வழிஇல்லாமல் சாலையில் வழிந்தோடுகிறது. இதனால் பொதுமக்கள் மற்றும் வாகன ஒட்டிகள் நலன் கருதி இப்பகுதியில் புதியதாக சிறுபாலம் அமைத்தல் பணிக்கு ரூ.2.00 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை பொது நிதியில் மேறகொள்ள மன்றப்பொருள் வைக்கலாம். **அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்**: 1342 /2023/இ1)

| | | |
|---|---|---|
| **<u>நகர்மன்ற தீர்மான எண்.</u>** | : | 653 நாள் : 24.11.2023 |

| | | |
|---|---|---|
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 14**

காங்கயம் நகராட்சி வார்டு எண்:15 கோவை ரோடு தண்ணீர் தொட்டி அருகிலுள்ள ஆழ்குழாய்கிணற்றில் இருந்து சின்டெக்ஸ் டேங் அமைத்து அப்பகுதி பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் மேற்படி ஆழ்குழாய்கிணற்றில் ஆழம்படுத்த பைப் லைன் கொண்டு செல்ல இயலாததால் அதனை தூர்வாரி (Flushing) குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்து குடிநீர் விநியோகம் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.1.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்: 1067/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 654 நாள் : 24.11.2023 |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 15**

காங்கயம் நகராட்சியில் அய்யாசாமி நகர் காலனி பூஸ்டர்ஸ்டேசன் காவிரி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தில் காங்கயம் நகராட்சிக்கு குடிநீர் வழங்கப்படும் தரைமட்ட நீர்தேக்க தொட்டியில் ஏற்கனவே உள்ள 60 HP மின்மோட்டார் அடிக்கடி பழுதடைந்து குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. மேலும், Stand by 60 HP மின்மோட்டார் அடிக்கடி பழுதடைந்து மின்மோட்டார்கள் இயங்க இயலாத நிலையில் உள்ளது. எனவே நகராட்சியில்

உள்ள பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்க இயலாமல் பாதிக்கப்பட்டு வருகின்றது. மேற்படி இரண்டு மின்மோட்டார்களும் பழுதடைந்து சீராக உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் புதியதாக ஒரு 60 HP மின்மோட்டார் வாங்கி அய்யாசாமி நகர் காலனி பூஸ்டர் தரைமட்ட குடிநீர் தொட்டியில் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்து தருவது மிகவும் அவசியமாகும். மேற்படி 60HP மின்மோட்டார் மற்றும் ஸ்டாட்டர் ஆகியவற்றை வாங்குவதற்கு உத்தேச செலவினம் மதிப்பீடு ரூ.5.50 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சத்தி ஐம்பாதயிரம் மட்டும் ) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்**:735/2023/**இ1)**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | **:** | **655** நாள் : **24.11.2023** |
| **தீர்மானம்** | **:** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 16**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:1 முதல் 18 வரை உள்ள மின்கம்பங்கள், மின்மோட்டார்கள் மற்றும் இதர மின் இணைப்பிற்கான செலவினங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்த வேண்டியுள்ளது. ஆதலால் மேற்படி செலவினத்திற்கு உத்தேசமாக ரூ.3.00 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் தொகையினை பொது நிதி மற்றும் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்**: 405/2023 /இ1)

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 656 நாள் : 24.11.2023 |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 17**

காங்கயம் நகராட்சியில் அமராவதி குடிநீர் திட்டம், காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் என இரண்டு குடிநீர் திட்டங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும், நூற்றுக்கு மேற்பட்ட சிறுமின் விசைப்பம்பு திட்டங்கள் பொது மக்களின் தேவையை பூர்த்தி செய்ய செயல்பட்டு வருகின்றன. இப்பணிகளை பராமரித்து இயக்க நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லை. மேலும், நகராட்சியில் நடைபெறும் பொது நிதி மற்றும் திட்டப்பணிகளை கண்காணிக்கவும் போதிய தொழில் நுட்ப உதவியாளர்கள் இல்லை. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் கீழ்க்காணும் பணியாளர்களை கொண்டு மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1. குழாய் திருப்புனர் - 8 எண்ணிக்கை
2. Pump Operator - 8 எண்ணிக்கை
3. Jeep Driver - 1 எண்ணிக்கை
4. தொழில்நுட்ப பணியாளர் - 4 எண்ணிக்கை

மேற்கண்ட பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 01.11.2023 முதல் 30.04.2024 வரை பணியமர்த்தி பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.25.00 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பு தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்**:1346/2023/இ1)

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 657 நாள் : 24.11.2023 |

| | | |
|---|---|---|
| **<u>தீர்மானம்</u>** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 18**

காங்கயம் நகராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தில் குடிநீர் மேம்பாட்டுத் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டப்பணியில் நகரிலுள்ள அனைத்து வீதிகளிலும் பகிர்மானக் குழாய்கள் (Distribution System) புதியதாக அமைக்கப்படவுள்ளது. அவ்வாறு குழாய்கள் பதிக்க குழி தோண்டும் பொழுது ஏற்கனவே குடிநீர் செல்லும் குழாய்களில் உடைப்புகள் ஏற்படுகின்றன. இதனால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்க முடியாத நிலை ஏற்படுகிறது. பொதுமக்கள் நலன் கருதி உடைப்பு ஏற்படும் குழாய்களை உடனுக்குடன் மாற்றி புதியதாக குழாய்கள் அமைத்து குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. எனவே, இதற்கென (Zone 1,3 மற்றும் 4) ஆகிய பகுதிகளில் உடையும் PVC, GI குடிநீர் குழாய்கள் மற்றும் DI குழாய்கள் அதற்கான உபகரணங்களை (Specials) கொண்டு உடைப்புகளை சரி செய்ய வேண்டியுள்ளது. மேற்படி, பணியினை மேற்கொள்ள ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்: 1446 /2023/இ1)**

| | | |
|---|---|---|
| **<u>நகர்மன்ற தீர்மான எண்.</u>** | : | 658 நாள் : **24.11.2023** |
| **<u>தீர்மானம்</u>** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 19**

காங்கயம் நகராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தில் குடிநீர் மேம்பாட்டுத் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டப்பணியில் நகரிலுள்ள அனைத்து வீதிகளிலும் பகிர்மானக் குழாய்கள் (Distribution System) புதியதாக அமைக்கப்படவுள்ளது. அவ்வாறு குழாய்கள் பதிக்க குழி தோண்டும் பொழுது ஏற்கனவே குடிநீர் செல்லும் குழாய்களில்

உடைப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்க முடியாத நிலை ஏற்படுகிறது. பொதுமக்கள் நலன் கருதி உடைப்பு ஏற்படும் குழாய்களை உடனுக்குடன் மாற்றி புதியதாக குழாய்கள் அமைத்து குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. எனவே, இதற்கென (Zone 6, 7 மற்றும் 11) ஆகிய பகுதிகளில் உடையும் PVC, GI குடிநீர் குழாய்கள் மற்றும் DI குழாய்கள் அதற்கான உபகரணங்களை (Specials) கொண்டு உடைப்புகளை சரி செய்ய வேண்டியுள்ளது. மேற்படி, பணியினை மேற்கொள்ள ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்: 1453 /2023/இ1)**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | **659** நாள் : **24.11.2023** |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 20**

காங்கயம் நகராட்சி பேருந்து நிலையம் அருகில் உள்ள அம்மா உணவகத்தில் தினமும் திரளான பொதுமக்கள் உணவருந்த செல்கின்றனர். அம்மா உணவகத்தில் உள்ள கழிப்பிட கதவுகள், நுழைவு வாயில் கேட் மற்றும் தண்ணீர் தொட்டி மேல்மூடி பழுதடைந்து உள்ளதால், அவற்றை சரிசெய்யவும், பராமரிப்பு மேற்கொள்ளும் பணிக்கு உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்:1193/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 660 நாள் : 24.11.2023 |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 21**

காங்கயம் நகராட்சி வார்டு எண்:2 புறநகர் மற்றும் நகரபேருந்து நிலையத்திற்கு அதிகப்படியான பேருந்துகள் வந்து செல்கிறது. மேலும், திரளான பொதுமக்கள் தினமும் இப்பேருந்து நிலையத்திற்கு வந்து செல்கிறார்கள். இப்பேருந்து நிலையத்தில் உள்ள RCC Roof, செங்கல் சுவர், பகுதிகள் சேதமடைந்து உள்ளது. ஆதலால் பொதுமக்கள் நலன் கருத்தில் கொண்டு மேற்கண்ட பரமாரிப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி பணிக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்: 1614 /2023/இ1)**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 661 நாள் : 24.11.2023 |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 22**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:15 தண்ணீர் பந்தல் நீர்ஏற்றம் நிலைய கட்டிடம் பராமரிப்பு இன்றி கட்டிடம் மிகவும் சேதமடைந்து காணப்படுகிறது. மேற்கண்ட நீர்

ஏற்றம் நிலையத்தில் இருந்து குடிநீர் இந்நகராட்சி பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆதலால், மேற்படி தண்ணீர் பந்தல் நீரேற்று நிலைத்தை பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.5.00 இலட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்: /2023/இ1)**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | **:** | **662** நாள் : **24.11.2023** |
| **தீர்மானம்** | **:** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 23**

காங்கயம் நகராட்சி உரக்கிடங்கு வளாகத்தில் பாய்லிங் மெஷின், பூச்சிகளை கொல்லும் இயந்திரம், மின்னனு எடை இயந்திரம், கழிவுநீர் இயந்திரம், ஆட்டோச்சீவ்டு இயந்திரம், சக்கர தள்ளு வண்டி, மரத்தை அறுக்கும் இயந்திரம் ஆகியவற்றை **15வது நிதிக்குழு மானியம் (Tied Grand) 2023-24ன் திட்டத்தின் கீழ்** வாங்கி பொருத்தும் பணிக்கு ரூ.21.50 இலட்சம் (ரூபாய் இருபத்தி ஒரு இலட்சத்தி ஐம்பாதயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள்:08.09.2023. அதன்படி, 06.10.2023ல் நடைபெற்ற டெண்டரில் கீழ்க்காணும் படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | M/S Healthcare Technology, Chennai | மதிப்பீட்டை விட – 0.02% குறைவு |
| 2 | M/S Sri Sai Industry, Chennai | மதிப்பீட்டு விலைவிகிதம் |

மேற்கண்ட படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1.மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட–0.02% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள M/S Healthcare Technology,

Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2.இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்618/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 663 நாள் : 24.11.2023 |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 24**

காங்கயம் நகராட்சியில் **15வது நிதிக்குழு மானியம் (Tied Grand) 2023-24ன் திட்டத்தின் கீழ்** தாளக்கரை தலைமை நீரேற்று நிலையத்தில் தெற்கு பகுதியில் சுற்றுச்சுவர் அமைத்தல் பணிக்கு ரூ.29.00 இலட்சம் (ரூபாய் இருபத்தி ஒன்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள்:08.09.2023. அதன்படி, 06.10.2023ல் நடைபெற்ற டெண்டரில் கீழ்க்காணும் படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | M/S Vanjiamman constructions | மதிப்பீட்டை விட – 0.11% குறைவு |
| 2 | M/S SSR & Co | மதிப்பீட்டை விட + 3.49% அதிகம் |

மேற்கண்ட படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1.மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட–0.11% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள M/S Vanjiamman constructions அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2.இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்618/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 664 நாள் : 24.11.2023 |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 25**

காங்கயம் நகராட்சியில் **15வது நிதிக்குழு மானியம்** (Tied Grand) **2023-24ன் திட்டத்தின் கீழ்** தாளக்கரை தலைமை நீரேற்று நிலையத்தில கட்டிட பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.13.50 இலட்சம் (ரூபாய் பதிமூன்று இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள்:08.09.2023. அதன்படி, 06.10.2023ல் நடைபெற்ற டெண்டரில் கீழ்க்காணும் படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | M/S Vanjiamman constructions | மதிப்பீட்டை விட – 0.10% குறைவு |
| 2 | M/S SSR & Co | மதிப்பீட்டை விட + 6.12% அதிகம் |

மேற்கண்ட படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1.மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட–0.10% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள M/S Vanjiamman constructions அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2.இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்618/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | **665** நாள் : **24.11.2023** |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 26**

காங்கயம் நகராட்சியில் **15வது நிதிக்குழு மானியம்** (Tied Grand) **2023-24ன் திட்டத்தின் கீழ்** உரக்கிடங்கு வளாகத்தில் 2TPD கொள்ளளவு கொண்ட எரியூட்டும் கலன் அமைத்தல் பணிக்கு ரூ.31.00 இலட்சம் (ரூபாய் முப்பத்தி ஒரு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள்:08.09.2023. அதன்படி, 06.10.2023ல் நடைபெற்ற டெண்டரில் கீழ்க்காணும் படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | M/S Clear Tech Environmental Solutions | மதிப்பீட்டை விட – 1.90% குறைவு |

மேற்கண்ட படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** 1.மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட–1.90% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள M/S Clear Tech Environmental Solutions அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2.திட்டப்பணியாக உள்ளதாலும் பொதுசுகாதார நலன் கருதி மேற்படி பணியை உடனடியாக செய்ய வேண்டியுள்ளதால் பெறப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

3.இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்618/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **<u>நகர்மன்ற தீர்மான எண்.</u>** | : | **666** நாள் : **24.11.2023** |
| **<u>தீர்மானம்</u>** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 27**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அய்யாசாமி நகர் காலனி நீருந்து நிலையம் மற்றும் தண்ணீர் பந்தல் நீருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு சுகாராதாரமான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய Hypochloride liquid திரவியம் வாங்கும் பணிக்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள்:25.09.2023ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 13.10.2023ல் நடைபெற்ற டெண்டரில் கீழ்க்காணும் படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | SSA கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டை விட – 0.07% குறைவு |
| 2 | S.சுப்பையா | மதிப்பீட்டை விட +3.82 % அதிகம் |

மேற்கண்ட படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** 1.மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட–0.07% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள SSA கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2.இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை

மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்: 1201/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 667 நாள் : 24.11.2023 |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 28**

காங்கயம் நகராட்சி அலுவலகத்திற்கு கணினி, Printer மற்றும் Tonner வாங்கும் பணிக்கு ரூ.4.97 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள்:14.09.2023ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 13.10.2023ல் நடைபெற்ற டெண்டரில் கீழ்க்காணும் படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | M/s Syscon Systems | மதிப்பீட்டை விட – 0.10% குறைவு |
| 2 | M/s Sagar Electronics | மதிப்பீட்டை விட +2.52 % அதிகம் |

மேற்கண்ட படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1.மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட–0.10% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள M/s Syscon Systems அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2.இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்: 157/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 668 நாள் : 24.11.2023 |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 29**

காங்கயம் நகராட்சி வார்டு எண்:5 பஜனைமட வீதியில் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய்கிணற்றில் புதியதாக பிவிசி குழாய் அமைத்தல் பணிக்கு ரூ.0.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள்:07.09.2023ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 13.10.2023ல் நடைபெற்ற டெண்டரில் கீழ்க்காணும் படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | M/s SSA கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டை விட – 0.06% குறைவு |

| | | |
|---|---|---|
| 2 | S.சுப்பையா | மதிப்பீட்டை விட +2.71 % அதிகம் |

மேற்கண்ட படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** 1.மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட–0.06% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள M/s SSA கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2.இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்:1352/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **<u>நகர்மன்ற தீர்மான எண்.</u>** | : | **669** நாள் : **24.11.2023** |
| **<u>தீர்மானம்</u>** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 30**

காங்கயம் நகராட்சி வார்டு எண்:13 சத்யா நகர் பகுதியில் Soak Pit அமைத்தல் பணிக்கு ரூ.0.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள்:20.09.2023ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 13.10.2023ல் நடைபெற்ற டெண்டரில் கீழ்க்காணும் படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | S.சுப்பையா | மதிப்பீட்டை விட – 0.05% குறைவு |
| 2 | R.வடிவேல் | மதிப்பீட்டை விட +6.18 % அதிகம் |

மேற்கண்ட படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** 1.மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட–0.05% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள S.சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2.இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்:1202/2023/இ1)**

| நகர்மன்ற தீர்மான எண். | : | 670 நாள் : 24.11.2023 |
|---|---|---|
| தீர்மானம் | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 31**

காங்கயம் நகராட்சி வார்டு எண்:15 பங்களாபுதூர் சாலையில் உள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டியை பழுது பார்க்கும் பணிக்கு ரூ.0.65 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள்:20.09.2023ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 13.10.2023ல் நடைபெற்ற டெண்டரில் கீழ்க்காணும் படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | S.சுப்பையா | மதிப்பீட்டை விட – 0.08% குறைவு |
| 2 | R.வடிவேல் | மதிப்பீட்டை விட +6.23 % அதிகம் |

மேற்கண்ட படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1.மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட–0.08% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள S.சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2.இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்: 1179/2023/இ1)**

| நகர்மன்ற தீர்மான எண். | : | 671 நாள் : 24.11.2023 |
|---|---|---|
| தீர்மானம் | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 32**

காங்கயம் நகராட்சி அய்யாசாமி நகர் காலனி பூஸ்டர் ஸ்டேசனில் தரைமட்ட நீர்தேக்க தொட்டிக்கு புதியதாக 60HP மோட்டார் ஸ்டாட்டர் வாங்கி பொருத்தும் பணிக்கு ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள்:29.09.2023ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 16.10.2023ல் நடைபெற்ற

டெண்டரில் கீழ்க்காணும் படி விலைகுறைப்புகளின் படியும், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | M/s Vel Pumpsets, Coimbatore | மதிப்பீட்டை விட – 0.56% குறைவு |
| 2 | M/s SV Enterprises | மதிப்பீட்டை விட +2.90 % அதிகம் |

மேற்கண்ட படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1.மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட–0.56% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள M/s Vel Pumpsets அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2.இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்: 735/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | : | 672 நாள் : 24.11.2023 |
| **தீர்மானம்** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

## பொருள் எண் : 33

காங்கயம் நகராட்சியில் சிறுமின் விசைப்பம்பு திட்டங்களை பராமரித்து இயக்க குழாய் திருப்புனர்கள், பம்ப்ஆப்பரேட்டர், ஈப்பு ஓட்டுநர், தொழில்நுட்ப உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தொகை வழங்கும் பணிக்கு ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள்:12.10.2023ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 31.10.2023ல் நடைபெற்ற டெண்டரில் கீழ்க்காணும் படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | M/S SSA கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டை விட – 0.10% குறைவு |
| 2 | S. சுப்பையா | மதிப்பீட்டை விட +1.58% அதிகம் |

மேற்கண்ட படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1.மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட–0.10% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள M/S SSA கன்ஸ்ட்ரக்ஷன்

அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2.இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்:1346/2023/இ1)**

| | | |
|---|---|---|
| **<u>நகர்மன்ற தீர்மான எண்.</u>** | : | 673 நாள் : 24.11.2023 |
| **<u>தீர்மானம்</u>** | : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**(ஒ.ம்) திரு.ந. சூர்யபிரகாஷ்**
**நகர்மன்ற தலைவர்**
**காங்கயம் நகராட்சி**

**/ உண்மைநகல் /**

**ஆணையாளர்**
**காங்கயம் நகராட்சி**

# காங்கயம் நகராட்சி

# அவசர கூட்டம்

**காங்கயம் நகராட்சியின் அவசர கூட்டம் நிகழும் சுபகிருது வருடம் தமிழ் மாதம் கார்த்திகை 08 ஆம் நாள் ஆங்கில வருடம் 2023 நவம்பர் 24 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு காங்கயம் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். அது சமயம் கீழ்க்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்ய இருப்பதால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

**இடம்:காங்கயம்** **நகர்மன்ற தலைவர்**

**நாள்:24.11.2023** **காங்கயம் நகராட்சி**

**பொருள் எண் : 1**

**(கோப்பு எண்.1098/ 2023/ எப்1)**

திருப்பூர் மாவட்டம் காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.ச.எண். 340/3C1, 340/4, 340/7, 340/8, 340/9, 340/10 மற்றும் 346/33-ல் 8273 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி திரு.G.மணிமாறன் த/பெ.ஏ.சி.கோவிந்தசாமி என்பவர் இணையதளம் வாயிலாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார்.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேசத்தை பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடித ந.க எண் MQXK1H6V/2023/TCP நாள்.24.07.2023–ல் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/TIRUPPUR/LAYOUT No.210/2023, நாள்.24.07.2023–ல் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

காங்கயம் நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலைகள், பொது உபயோகத்திற்கான இடம் மற்றும் மின்பகிர்மானத்திற்கு (TANGEDCO) ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் ஆகியவை காங்கயம் சார் பதிவாளர் அலுவலக ஆவணம் எண்.4635/2023 நாள்.11.07.2023 – ன் மூலம் ஆணையாளர், காங்கயம் நகராட்சி

அவர்களுக்கு தானப்பத்திரம் வாயிலாக மனைப்பிரிவுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

அரசாணை எண் **181**, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நவ**4(3)**த்துறை நாள்.**09.12.2021–**ல் தெரிவித்துள்ளபடி, மனைப்பிரிவிற்கு தேவையான தார்சாலை வசதி மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி பூங்கா மற்றும் திறவிடங்களுக்கு வேலி அமைத்தல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மனைப்பிரிவு உரிமைதாரருக்கு கேட்பு அனுப்பி மனைப்பிரிவுதாரரிடமிருந்து வசூல் செய்ய காங்கயம் நகராட்சி பொறியாளருக்கு குறிப்பு வைக்கப்பட்டதை தொடர்ந்து காங்கயம் நகராட்சி பொறியாளர் தனது 27.10.2023 –ம் தேதிய குறிப்பில் தயார் செய்த மதிப்பீட்டின் படி

| | | | |
|---|---|---|---|
| 1 | நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட பொது இடத்தில் கம்பி வேலி அமைத்தல் | - | 31000 |
| 2 | தெருவிளக்குகள் அமைத்தல் வைப்பு தொகை | - | 204820 |
| 3 | வைப்பு தொகை | | 200000 |
| | மொத்தம் | | 435820 |

நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட பொது இடத்தில் கம்பி வேலி அமைத்தல் தொகை ரூ.31000/– பற்றுச்சீட்டு எண் 158/158/01/23-24/0017203, நாள்.15.11.2023 மற்றும் தெருவிளக்குகள் அமைத்தல் தொகை ரூ.2,04,820/–யை TNEB பற்றுச்சீட்டு எண்.PGCINB575864443 நாள்.27.10.2023 மற்றும் வைப்பு தொகை ரூ.2,00,000 நகராட்சியின் பற்றுச்சீட்டு எண்.158/158/01/23-24/0015656 நாள்.26.10.2023 செலுத்தியுள்ளார் எனவும் மேலும் மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள தார் சாலை, வடிகால் வசதி, குடிநீர் குழாய் ஆகியவை நல்ல முறையில் அமைக்கப்பட்டதற்கு தருமபுரி அரசு பொறியியல் கல்லூரி மூலம் மூன்றாம் நபர் தரபரிசோதனை சான்று எண். GCE/DPI/Civil/Inspection/Residential Plot Layout/2023/37 நாள்.19.10.2023–ல் நல்ல முறையில் மனுதாரரால் அமைக்கப்பட்டுள்ளது என சான்று வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் மனைப்பிரிவு அனுமதிக்காக செலுத்த வேண்டிய தொகைக்கான கேட்பு இவ்வலுவலக அறிவிப்பு ந.க எண் 1098/2023/எப்1, நாள்:03.11.2023–ன் வாயிலாக மனைப்பிரிவுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, **1.** கூர்ந்தாய்வுக் கட்டணம் – ரூ.**12410**/–, 2.மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் –ரூ.20000/-, 3.அபிவிருத்திக் கட்டணம் 49640/-, நிலப்பயன்மாற்ற பரிசீலனைக் கட்டணம் ரூ.1000/- ஆகியவை பற்றுச்சீட்டு எண் 158/158/01/23-24/0016251, நாள்.03.11.2023–ன் வாயிலாக நகராட்சி கருவூலத்தில்

மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. அரசாணை எண்.79, வீட்டு வசதி வாரியம் மற்றும் நகர்ப்புறவளர்ச்சி (நவ 4(3)) துறை, நாள். 04.05.2017–ன் படி நிலப்பயன்மாற்ற கட்டணமாக ரூ.44200– காங்கயம் இணையதள செலுத்துச் சீட்டு எண். 20231104032013, மற்றும் 20231104031968 நாள். 04.11.2023 வாயிலாக மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.ச.எண். 340/3C1, 340/4, 340/7, 340/8, 340/9, 340/10 மற்றும் 346/33-ல் 8273 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீட்டினை நகர்மன்றத்தின் பராமரிப்பிற்கு ஏற்பதற்கும் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கவும் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

| | | |
|---|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்.** | **:** | **674** நாள் **: 24.11.2023** |
| **தீர்மானம்** | **:** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**(ஒ.ம்) திரு.ந. சூர்யபிரகாஷ்**
**நகர்மன்ற தலைவர்**
**காங்கயம் நகராட்சி**

**/ உண்மைநகல் /**

**ஆணையாளர்**
**காங்கயம் நகராட்சி**